பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**13 03 2026** **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டம் அவர்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. எந்தவொரு பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. ஜனநாயகம் மற்றும் தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்துவதில், புதுமை கண்டுபிடிப்புகள் முக்கிய பங்கு வகிப்பதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** கூறியுள்ளார்.

4. பாகிஸ்தான் ராணுவம், ஆப்கானிஸ்தான் மீது நடத்திய தாகுதலில் 4 பேர் உயிரிழந்தனர். 14 பேர் காயமடைந்தனர்.

5. கொல்கத்தா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டம் அவர்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அஸ்ஸாம் மாநிலம் குவஹாத்தியில் இத்திட்டத்தின்கீழ் 22-ஆவது தவணைத் தொகையை விடுவித்து அவர் பேசினார்.

சர்வதேச நெருக்கடிகள் காரணமாக நமது விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசை பொறுத்தவரை விவசாயிகள் நலன்களை பாதுகாப்பது இன்றியமையாததாகும் என்று அவர் கூறினார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டம் தொடங்கப்பட்டபோது, இதுதொடர்பாக காங்கிரஸ் கட்சி வதந்திகளை பரப்பியதாக கூறினார்.

சர்வதேச அளவில் நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக நமது வேளாண் துறைக்கு எந்த பாதிப்பும் ஏற்படக்கூடாது என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச சந்தையில் உரங்களின் விலை அதிகரித்துள்ள போதிலும், தமது அரசு மானிய விலையில் விவசாயிகளுக்கு உரங்களை வழங்கி வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

அனைத்துத் துறைகளும் வளர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்கில் தமது அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று தொடங்கிவைக்கப்பட்ட பிற திட்டங்கள் அஸ்ஸாமின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் திரு நரேந்திர மோடி கூறினார்.

இதற்கிடையே, இந்த திட்டத்தின்கீழ், தமது வங்கிக்கணக்கில் 2 ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும், இது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தார்.

***(Sound Byte — விவசாயிகள் — 61 Sec. )***

<<<<<<>>>>>>

எந்தவொரு பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், பிரதமர் திரு நரேந்திர மோடி, ஈரான் அதிபருடன் நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியதை சுட்டிக்காட்டினார்.

அங்குள்ள இந்தியார்களின் பாதுகாப்பு குறித்தும் பிரதமர் கேட்டறிந்ததாக அவர் தெரிவித்தார்.

மேற்காசியா பதற்றத்தையடுத்து, வெளியுறவுத்துறை சார்பில் கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுவரை தொள்ளாயிரம் தொலைபேசி அழைப்புகளும், 200 மின்னஞ்சலும் பெறப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களில் மட்டும் 170-க்கும் மேற்பட்டோர் ஈரானிலிருந்து அர்மேனியாவுக்கு பாதுகாப்பாக அழைத்து செல்லப்பட்டுள்ளதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் கூறினார்.

<<<<<<>>>>>>

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றிக்கு பிரம்மோஸ் ஏவுகணை முக்கிய பங்கு வகித்ததாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

லக்னோவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த ஏவுகணைகள் பாகிஸ்தானின் தீவிரவாத முகாம்களை துல்லியமாக தாக்கியதாக கூறினார்.

ஆபரேஷன் சிந்தூரில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பாதுகாப்பு தளவாடங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம், நமது பாதுகாப்பு வலிமையை உலகம் உணர்ந்ததாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நிலக்கரி உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

நடப்பு நிதியாண்டில் இதுவரை 20 கோடி டன் நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இது கடந்த நிதியாண்டின் இதே காலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில், பத்து புள்ளி ஐந்து ஆறு சதவீதம் அதிகமாகும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

வணிக பயன்பாட்டிற்கான **20** சதவீத சமையல் எரிவாயு ஒதுக்கீடு இன்று முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரியை சந்தித்து ஆலோசனை மேற்கொண்ட பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேற்காசியாவில் நிலவும் பதற்றம் காரணமாக ஏற்பட்டுள்ள சூழ்நிலையை மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பிரச்சினை காரணமாக பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.

<<<<<<>>>>>>

ராஜஸ்தானில் பெட்ரோலியப் பொருட்களின் விநியோகம் சீராக உள்ளதாக அம்மாநில அமைச்சர் திரு **Jogaram Patel** கூறியுள்ளார்.

ஜோத்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சமையல் எரிவாயு தட்டுப்பாடு இன்றி விநியோகம் செய்யப்பட்டு வருவதாக கூறினார்.

இதுகுறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டர்.

<<<<<<>>>>>>

ஜனநாயகம் மற்றும் தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்துவதில், புதுமை கண்டுபிடிப்புகள் முக்கிய பங்கு வகிப்பதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்தியா மற்றும் பூட்டானை சேர்ந்த வருவாய் சேவை பயிற்சி அதிகாரிகள் இடையே உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

பொதுச் சேவையை மேம்படுத்துவதிலும் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாக திரு **Gyanesh Kumar** கூறினார்.

<<<<<<>>>>>>

கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்கு சதவீத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு ரத்தன் கேல்கர் கூறியுள்ளார்.

இன்று திருவனந்தபுரத்தில் தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியர்களோடு ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

**85** சதவீதத்திற்கும் கூடுதலாக வாக்குப்பதிவு இருப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த தேர்தலை அமைதியாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் நடத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு ரத்தன் கேல்கர் கூறினார்.

<<<<<<>>>>>>

தெலங்கானாவில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும், இதுதொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் **B R S** செயல் தலைவர் திரு கே டி ராமராவ், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா-வுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

காங்கிரஸ் அரசின் ஊழல் முறைகேடு புகார்கள் குறித்தும் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று திரு கே டி ராமராவ் அந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

கோவாவில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப கொள்கை அடுத்த 100 நாட்களுக்குள் வெளியிடப்படும் என்று அம்மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு Rohan Khaunte கூறியுள்ளார்.

கோவா சட்டப்பேரவையில் இதனை தெரிவித்த அவர், இதற்கான நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

<<<<<<>>>>>>

ஈரானில் உள்ள ராணுவத் தளங்கள் மீது உலகம் இதுவரை கண்டிறாத வேகத்தில் தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு Pete Hegseth கூறியுள்ளார்.

அமெரிக்கா நடத்திய தாக்குதலில் தற்போதைய ஈரான் உயரிய தலைவரும் காயமடைந்துள்ளதாக அவர் கூறினார்.

<<<<<<>>>>>>

பாகிஸ்தான் ராணுவம், ஆப்கானிஸ்தான் மீது நடத்திய தாகுதலில் 4 பேர் உயிரிழந்தனர். 14 பேர் காயமடைந்தனர்.

காபூல், கந்தஹார், Paktal உள்ளிட் பகுதிகளை குறிவைத்து பாகிஸ்தான் ராணுவம் இந்த தாக்குதலை நடத்தியதாக ஆப்கான் அரசு தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலை கண்டித்துள்ள அந்நாட்டு அரசின் செய்தித்தொடர்பாளர் திரு Zabihullah Mujahid, புனித ரமலான் மாதத்தில் பாகிஸ்தான் இத்தகைய தாக்குதலை நடத்தி வருவது ஏற்புடையது அல்ல என்றார்.

மனித நேயத்திற்கு எதிராக பாகிஸ்தான் அரசு செயல்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

பாகிஸ்தான் தாக்குதலுக்கு உரிய பதிலடி கொடுக்கப்படுவதாகவும் திரு Zabihullah Mujahid தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

கொல்கத்தா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், **6-7, 6-3, 7-5** என்ற செட் கணக்கில், யுக்ரைனின் **Yurii Dzhavakian** -ஐ வென்றார்.

-------------

உலக பாரா கிராண்ட்பிரி தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஆறு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் **400** மீட்டர் ஓட்டப்பிரிவுகளில் **Mohit Pal, Bhavikkumar Bharwad, Subodh Bhatt** மற்றும் **Manoj Kumar Sabapathi** தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் குண்டு எறிதல் பிரிவில் லஷ்மியும், ஆடவர் ஈட்டி எறிதலில் சுனில் குமாரும் தங்கப்பதக்கம் வென்றனர்.

**<<<<<<END>>>>>>**